## கணக்கு - பிழைகளும் திருத்தங்களும்

1. செய்முறை வடிவியல் (Practical Geometry) பகுதியில் படம் வரையும் போது பகுதிகள் (A, B, C, P, Q, etc), அளவுகள் (4cm, 8cm, $45^0$, etc) படத்தில் கட்டாயம் குறித்துக்காட்டவேண்டும்.
2. வரைபட (Graph) பகுதியில் அளவுத்திட்டம் (Scale), X அச்சு, Y அச்சுகளை எழுதவேண்டும். அதற்கு 2 மதிப்பெண்கள் வழங்கப்படும். தீர்வு கேட்கப்பட்டிருந்தால் எழுத வேண்டும்.
3. சூத்திரங்கள் (Formula) தேவைப்படும் இடங்களில் எழுத வேண்டும்.
4. விடையின் கடைசியில் அலகு (unit) தேவைப்பட்டால் கட்டாயம் எழுத வேண்டும். உதாரணமாக 6 ச.மீ (6 sq.m) விடை எனில் 6 என எழுதக் கூடாது.
5. தேவையான இடங்களில், { }, ( ) போன்ற அடைப்புகுறிகளை சரியாக போடவேண்டும்.
   உதாரணமாக, {1,2} என்பதை 1, 2 என எழுதக்கூடாது.
6. சில மாணவர்கள், வினா எண் எழுதிவிட்டு, நேரடியாக “ = ” போட்டு விடை எழுத தொடங்குகின்றனர். உதாரணமாக முக்கோணத்தின் பரப்பு வினா கேட்கப்பட்டிருந்தால், “முக்கோணத்தின் பரப்பு = ” என விடை எழுத துவங்க வேண்டும்.
7. “-24” என்பதை ஒரு step லிருந்து மற்றொரு step எடுத்து எழுதும்போது வெறும் 24 என போடுவதால் விடை மாறும். அதேபோல் 24 என்பதை 22 என போட்டாலும் விடை மாறும்.

## கணக்கு - மெல்ல கற்கும் மாணவர்களுக்கான ஆலோசனைகள்

1. ஒரு மதிப்பெண் வினாக்களுக்கு (1 Mark Questions): பாடபுத்தகத்தில் மொத்தமுள்ள 125 வினாக்களையும் நன்கு பயிற்சி செய்தாலே உறுதியாக 12 மதிப்பெண்களை பெற இயலும்
2. **வரைபடம் (Graph):** மாறுபாடுகளின் வரைபடம் (Graph of Variation) பகுதியில் 10 வினாக்கள் உள்ளன. இருபடிச் சமன்பாடுகளின் வரைபடங்கள் (Quadratic Graphs) பகுதியில் 20 வினாக்கள் உள்ளன. இவற்றில் ஏதேனும் ஒன்றை நன்கு பயிற்சி செய்து கொள்வதன் மூலம் உறுதியாக 8 மதிப்பெண்களை பெறலாம்.
3. செய்முறை வடிவயில் (Practical Geometry): வடிவொத்த முக்கோணங்கள் வரைதல் (Construction of similar Triangles) ல் 6 வினாக்களும், முக்கோணங்கள் வரைதல் (Construction of Triangles) ல் ல் 9 வினாக்களும், வட்டத்திற்கு தொடுகோடு வரைதல் (Construction of tangents to a circle) ல் 9 வினாக்களும் உள்ளன. மொத்தம் 24 வினாக்களிலிருந்து 2 வினாக்கள் கேட்கப்படும். இவற்றை நன்கு பயிற்சி செய்து கொள்வதன் மூலம் உறுதியாக 8 மதிப்பெண்களை பெறலாம்.
   **குறிப்பு:** மேற்க்கண்ட 3 பகுதிகளுக்கும் விடையளித்தால் 28 மதிப்பெண்கள் பெற்றுவிடலாம். கீழ்கண்ட 5 மதிப்பெண், 2 மதிப்பெண் வினாக்களையும் நன்கு பயிற்சி செய்து கொண்டால் கண்டிப்பாக தேர்ச்சி மதிப்பெண்களை பெற இயலும்.
4. **வடிவியல் (Geometry):** 6 தேற்றங்கள் (Theorems) மற்றும் பிதாகரஸ் தேற்றத்தின் மறுதலை (Converse of Pythagoras theorem), சீவாஸ் (Cevas), மெனிலாஸ் (Menelaus) தேற்றங்களின் கூற்றுகள் ஆகியவை 5 அல்லது 2 மதிப்பெண் வினாக்களில் ஏதேனும் ஒரு பகுதியில் கேட்க அதிக வாய்ப்புள்ளது.
5. ஆயத்தொலை வடிவியல் (Coordinate Geometry) ல் 2 மதிப்பெண்களில் கேட்கவாய்ப்புள்ள மையப்புள்ளி (Midpoint), நடுக்கோட்டுமையம் (Centroid), சாய்வு (Slope), 5 மதிப்பெண்களில் கேட்கவாய்ப்புள்ள முக்கோணத்தின் பரப்பு (Area of Triangle), நாற்கரத்தின் பரப்பு (Area of Quadrilateral) ஆகியவற்றை கண்டறிவதற்கான சூத்திரங்களை நன்கு படித்துக்கொண்டால், வினாவில் கொடுத்துள்ள Data வை formulaல் substitute செய்து எளிதில் மதிப்பெண் பெறலாம்.
6. எண்களும் தொடர்வரிசைகளும் (Numbers and Sequence) ல் சிறப்புத்தொடர்கள் (Special series), கூட்டுத்தொடர் (A.P), பெருக்குத்தொடர் (G.P) ஆகியவற்றையும், மட்டுக் கணக்குகளையும் (Problems of Modulo) நன்கு பயிற்சி செய்து கொள்ளவும்.
7. இயற்கணிதம் (Algebra) ல் பயிற்சி (Exercise): 3.8 , அணிகள் (Matrix) ஆகியவற்றை நன்கு பயிற்சி செய்து கொள்வதன் மூலம் ஒரு 5 மதிப்பெண் மற்றும் ஒரு 2 மதிப்பெண் வினாவுக்கு விடையளிக்கலாம்.
8. புள்ளியியல் (Statistics) – ல் வீச்சு கணக்குகள் (Problems of Range) ஐ நன்கு பயிற்சி செய்து கொள்ளவும்.
9. இது தவிர உறவுகளும், சார்புகளும் (Relations and Functions), நிகழ்தகவு (Probability) ஆகிய பாடங்களை நன்கு பயிற்சி செய்து கொள்ளவும்.